மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.02/2022
அ.வ.எண்.34/2022

1. பாப்பாத்தி
2. பெருமாள் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. கோவிந்தன்
2. செல்வராஜ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 11.07.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.G.பிரபு மற்றும் திரு.P.கதிரவன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதிகள்/மனுதாரர்களால் முதல்நிலை தீர்ப்பாணை, இறுதிநிலைதீர்ப்பாணை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களும், 2ம் எதிர்மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் ஆவர். தாவாசொத்துகள் பாகம் பிரிக்கப்படாத பூர்வீக கூட்டுக் குடும்ப சொத்துகள் ஆகும். தாவா சொத்துகளும், இதர சொத்துகளும் 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்களான தாசநாய்க்கர் மற்றும் வெங்கட்டம்மாளுக்கு

பாத்தியப்பட்டு, அவர்களது இறப்பிற்கு பின்னிட்டு 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரரான சித்தநாய்க்கர் ஆகியோருக்கு கடந்த 08.07.2015ம் தேதியிட்ட மேச்சேரி சார்பதிவாளர் அலுவலக பாக ஆவண எண்.2532/2015ன்படி தாவா "B" அட்டவணை சொத்துகள் 1ம் எதிர்மனுதாரருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது. மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் தாவா சொத்துகளில் 1/4 பாகம் உள்ளது. தாவா சொத்துகளில் மனுதாரர்களுக்கு கூட்டாக 2/4 பாகம் உள்ளது.

(ii) மேற்படி சொத்துகளில் தங்களுக்குரிய பாகத்தை கொடுக்குமாறு மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு எதிர்மனுதாரர்கள் மறுத்துவிட்டனர். எதிர்மனுதாரர்கள் பாகம் பிரித்துக் கொடுக்காமல் தாவா சொத்துகளை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயன்றதால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக முதல்நிலை தீர்ப்பாணை, இறுதிநிலை தீர்ப்பாணை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 1, 2ம் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:–

(குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் 1, 2ம் எதிர்மனுதாரர்களால் எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தாவாசொத்துகள் பாகம் பிரிக்கப்படாத பூர்வீக கூட்டுக் குடும்ப சொத்துகள் என்பது பொய்யாகும். தாவா சொத்துகளும், இதர சொத்துகளும் 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்களான தாசநாய்க்கர் மற்றும வெங்கட்டாளுக்கு பாத்தியப்பட்டு, அவர்களது இறப்பிற்கு பின்னிட்டு 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரரான சித்தநாய்க்கர் ஆகியோருக்கு கடந்த 08.07.2015ம் தேதியிட்ட மேச்சேரி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2532/2015ன்படி தாவா "B" அட்டவணை சொத்துகள் 1ம் எதிர்மனுதாரருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்பது உண்மையாகும். மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்துகளில் 1/4 பாகம் உள்ளது என்பதும், தாவா சொத்துகளில் மனுதாரர்களுக்கு கூட்டாக 2/4 பாகம் உள்ளது என்பதும் பொய்யாகும்.

(ii) கடந்த 13.02.2022ம் தேதியில் மனுதாரர்கள் பாகம் கோரி எதிர்மனுதாரர்களிடம் கேட்டபோது எதிர்மனுதாரர்கள் பாகம் பிரித்து தர மறுத்துவிட்டனர் என கூறுவது பொய்யாகும். தாவா சொத்துகள் ஆதியில் 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்களான தாசநாய்க்கர் மற்றும் வெங்கட்டம்மாளுக்கு பாத்தியப்பட்டு, அவர்கள் இறப்பிற்கு பின் அவர்களது வாரிசுகளான 1ம் எதிர்மனுதாரர் மற்றும் சித்தநாய்க்கர் ஆகியோர் 1997ல் வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டனர். தாவா சொத்துகள் மற்றும் இதர சொத்துகளுக்குரிய பட்டா அவர்களது பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது.

(iii) மேற்படி பாகப்பிரிவினையின்படி 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தின் பேரில் கடந்த 05.02.2007ம் தேதியில் 2ம் எதிர்மனுதாரருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார். அந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் சகோதரர் சித்தநாய்க்கரும், அவரது வாரிசுகளுக்கு தன் பாக சொத்தை தான செட்டில் மெண்ட் அளிக்க முயற்சித்த போது, சார்பதிவாளர் அலுவலகத்தில் தாவா சொத்திற்குரிய பட்டா 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரர் சித்தநாய்க்கர் ஆகியோரது பெயரிலேயே கூட்டாக இருந்ததால் மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தை முதலில் பதிவு செய்து கொண்டு, பின்பு தானசெட்டில்மெண்ட் ஆவணம் அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதால், பாகப்பிரிவினை ஆவணம் பதிவு செய்ய வேண்டி 2ம் எதிர்மனுதாரர் பெயரில் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டது.

(iv) பின்னிட்டு 1ம் எதிர்மனுதாரரும், அவரது சகோதரரான சித்தநாய்க்கரும் தங்களுக்குள் 1997ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையை ஆவணமாக பதிவு செய்து கொண்டனர். ஆனால் 2ம் எதிர்மனுதாரரின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டது குறித்து 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரரிடம் தெரியப்படுத்தவில்லை. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டாலும் கூட 2ம் எதிர்மனுதாரரே தொடர்ந்து தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார்.

(v) 1ம் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரரின் நேரடி வாரிசு ஆவார். ஆனால் 2ம் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு பிறந்த மகன் அல்ல. அதனால் அவர் தாவா சொத்தை பொறுத்து கூட்டு பங்குரிமையர் அல்ல. அவருக்கு தாவா சொத்தை பொறுத்து எவ்வித சட்டப்படியான உரிமையும் இல்லை. எனவே தாவா சொத்தானது 1ம் எதிர்மனுதாரரின் சுய சம்பாத்திய சொத்து என்பதாலும், மேற்படி தாவா சொத்தானது இந்து வாரிசுரிமை (திருத்தச் சட்டம்), 2005, நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே கடந்த 1997ம் வருடமே 1ம் எதிர்மனுதாரருக்கும், அவரது சகோதரருக்கும் இடையே பாகப்பிரிவினை செய்துவிட்டதாலும், மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை. எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் தாவாசொத்துகள் பாகம் பிரிக்கப்படாத பூர்வீக கூட்டுக் குடும்ப சொத்துகள் என்றும், தாவா சொத்துகளும், இதர சொத்துகளும் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரருக்கு இடையே கடந்த 08.07.2015ம் தேதியிட்ட மேச்சேரி சார்பதிவாளர் அலுவலக பாக ஆவண எண்.2532/2015ன்படி பாகம் பிரிக்கப்பட்டு, அதில் "B" அட்டவணை சொத்துகளாக தாவா சொத்துகள் 1ம் எதிர்மனுதாரருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு, மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களால் கூட்டாக அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றும், மனுதாரர்கள் தங்களுக்குரிய பாகத்தை பிரித்துக் கொடுக்குமாறு எதிர்மனுதாரர்களிடம் கேட்டதற்கு மறுத்து, தாவா சொத்தை 3ம் நபர்களுக்கு விற்க முயற்சி செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக முதல்நிலை தீர்ப்பாணை, இறுதிநிலை தீர்ப்பாணை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள்

கோரி இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்துகள் 1ம் எதிர்மனுதாரருக்கும், அவரது சகோதரருக்குமிடையே 1997ம் ஆண்டிலேயே வாய்மொழி பாகப்பிரிவினை செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துகளாகும். மேற்படி 1ம் எதிர்மனுதாரரால் 2ம் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்து குறித்து தான செட்டில்மெண்ட் ஆவணம் அளிக்கப்பட்டு, பின்னிட்டு மேற்படி ஆவணம் ரத்து செய்யப்பட்டது எனவும், இருப்பினும் தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் 2ம் எதிர்மனுதாரர் தான் இருந்துவருகிறார் என்றும், மேலும் 2ம் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரருக்கு பிறந்த வாரிசு இல்லை என்றும், அதனால் தாவா சொத்தை பொறுத்து அவருக்கு எவ்வித உரிமை இல்லை என்றும், மேலும் தாவா சொத்து 2005ம் வருடத்திற்கு முன்னரே 2007ம் வருடத்தில் பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்டதால், 1ம் எதிர்மனுதாரருக்கும் தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வாதிகள்/மனுதாரர்களால் முதல்நிலை தீர்ப்பாணை, இறுதிநிலைதீர்ப்பாணை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரரின் சுய சம்பாத்திய சொத்து எனவும், 2ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் உள்ளதாகவும், தாவா சொத்தை பொறுத்து மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரத்தையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரர்களால் தாவாவில்

கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்தா? என்பதும், தாவா சொத்தின் கூட்டு சுவாதீன அனுபவத்தில் மனுதாரர்கள் உள்ளனரா? என்பதும், தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சொத்து என எதிர்மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும், 2ம் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரருக்கு பிறந்த மகனா? என்பதுமே ஆகும்.

(vi) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of*

*temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரர்களால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.08.01 18:44:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.08.01 18:44:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.